**நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், உளுந்தூர்பேட்டை**

**முன்னிலை:- திரு.அஜித்சிங்ராஜா, B.A. B.L.,(Hons),**

**நீதித்துறை நடுவர் எண்.2, உளுந்தூர்பேட்டை**

**2026-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் - 468/2025**

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண் | ஆண்டுபட்டிகை வழக்கு எண் **(C.C.) No. 468/2025** |
| 2. | குற்றமுறையிடுபவர்<br>மற்றும் குற்ற எண் | அரசுக்காக காவல் பொறுப்பு அதிகாரி,<br>திருநாவலூர் காவல் நிலையம்,<br>**குற்ற எண்.** 72/2018. |
| 3. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் | **எதிரி 1. நேரு,**<br>த.பெ. சோமசுந்தரம்,<br>களத்தூர்,<br>உளுந்தூர்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி.<br><br>**எதிரி 2. மகேந்திரன் ,**<br>த/பெ. நேரு,<br>களத்தூர்,<br>உளுந்தூர்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி.<br><br>**எதிரி 3. கார்த்திக்,**<br>த/பெ. நேரு,<br>களத்தூர்,<br>உளுந்தூர்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி.<br><br>**....எதிரிகள்** |

| | | |
|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு நாள் | 25.01.2018 |
| 5. | காவல் நிலையத்தில் புகார் கொடுத்த நாள் | 27.01.2018 |
| 6. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.02.2018 |
| 7. | வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நாள் | 25.03.2025 |
| 8. | விசாரணை துவக்கம் | 01.07.2025 |
| 9. | U/s. 240(2) Cr.P.C –ன் படி எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்ட நாள் | 1–வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(1) IPC, 2 மற்றும் 3–வது எதிரிகளின் மீது பிரிவுகள் 323, 506(1) IPC –ன் படி.<br>நாள் – 15.07.2025 |
| 10. | வழக்கு விசாரணை முடிவு | 22.05.2026 |
| 11. | தீர்மானம் | • எதிரி 1 பிரிவுகள். 294(b), 324, 506(1) IPC –ன் படி குற்றவாளி இல்லை.<br>• எதிரி 2 மற்றும் 3 பிரிவுகள். 323, 506(1) IPC –ன் படி குற்றவாளிகள் இல்லை. |

## As per the ROC No. 48768-A/2017/F1 of High Court of Madras

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட நாள் | 25.03.2025 | | |
| 2 | Date of questioning u/s 228, 240, 246 and 251 of the code | 15.07.2025 | | |
| 3 | இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | மனு | முடிவு | நாள் |
| | | 1. U/S 320 Cr.P.C | Dismissed | 13.05.2026 |
| | | 2.U/S 311 Cr.P.C | Allowed | 13.05.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | Witness | Chief | Cross |
| | | PW 1 | 13.05.2026 | 13.05.2026 |
| | | PW 2 | 13.05.2026 | 13.05.2026 |
| | | PW 3 | 13.05.2026 | 13.05.2026 |
| 5 | சட்டப்பிரிவு 313 Cr.P.C–ன் கீழ் விசாரணை | 22.05.2026 | | |

இவ்வழக்கு கடந்த **25.03.2025–**ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை–2, உளுந்தூர்பேட்டை அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. தமிழரசன் B.Com.,.LL.B, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று **26.05.2026–**ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

### <u>குற்ற முறையீட்டின் சுருக்கம்</u>

**1.** அரசு தரப்பு வழக்கு என்னவென்றால், " கடந்த 25.01.2018–ம் தேதி சுமார் 19.00 மணிக்கு திருநாவலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட களத்தூர் கிராமத்தில் புகார்தாரர் கஸ்தூரி என்பவர் வீட்டில் இருந்தபோது, இவ்வழக்கின் எதிரிகளான நேரு, மகேந்திரன், கார்த்திக் ஆகியோர் முதல் நாள் நடைபெற்ற பிரச்சினையின் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு நேரு, கஸ்தூரியை "ஏய் தேவிடியா நாயே வெளியே வாடி" என அசிங்கமாக திட்டியுள்ளார். சத்தம் கேட்டு கஸ்தூரி வெளியே வந்து "ஏன் இப்படி வீண் தகராறு செய்கிறீர்கள்" என்று கேட்டதற்கு, எதிரி 2 மகேந்திரன் "உன்னை விட்டுட்டா எங்கள் மீது பயமில்லாமல் போய் விடும்" என்று சொல்லி கையால் கஸ்தூரியின் கன்னத்தில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். எதிரி 3 கார்த்திக் கஸ்தூரியின் நெஞ்சிலும் காலால் வயிற்றிலும் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். எதிரி 1 நேரு

கையில் வைத்திருந்த உருட்டுத்தடியால் கஸ்தூரியின் உடம்பில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். மேலும் எதிரிகள் அனைவரும் கஸ்தூரியை பார்த்து "உன்னை கொல்லாமல் விடமாட்டோம்" என கொலைமிரட்டல் விடுத்து குற்ற செயலினை புரிந்துள்ளதால் எதிரி நேரு பிரிவுகள் 294(b), 324, 506(I) IPC–ன் படியும், எதிரி மகேந்திரன், கார்த்திக் ஆகியோர் பிரிவுகள் 323, 506(I) IPC–ன் படியும் குற்றம் புரிந்ததாக திருநாவலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் **01.07.2025** அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் **15.07.2025** அன்று 1–வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(1) IPC –ன் கீழும், 2–வது மற்றும் 3–வது எதிரிகளின் மீது பிரிவுகள் 323, 506(I) IPC–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோதும் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரிகளின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

<u>விசாரணை</u>

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரித்தும், **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரை குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** <u>**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–**</u>

**5.1. அ.சா.1 – கஸ்தூரி, அ.சா.2 – வாசுதேவன்,** என்பவர்கள் தனது விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர்.

**5.2. அ.சா.2 முஜீபுர் ரஹ்மான் (தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில், "நான் தற்சமயம் திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் திரு. முருகராஜ், உதவி ஆய்வாளர் திருமதி.எழிலரசி என்பவர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.01.2018 அன்று காலையில் தலைமை காவலர் திரு. முருகராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த களத்தூர் கிராமத்தை சேர்ந்த கஸ்தூரி, க/பெ. வாசுதேவன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று வந்து நிலைய குற்ற எண்.72/2018ல் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக **இதச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(1)–ன் கீழ்** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கஸ்தூரி கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகும்.** பின்னர் வழக்கு கோப்பினை திருமதி. எழிலரசி வசம் ஒப்படைத்துள்ளார். திருமதி.எழிலரசி அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.01.2018 அன்று வழக்கின் சம்பவஇடம் சென்று சாட்சிகள் குப்புசாமி, பார்த்திபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான கஸ்தூரி, வாசுதேவன், முருகவள்ளி, அம்புஜம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் அன்றை தினமே 13.30மணியளவில் சேந்தமங்களம் பஸ் நிறுத்தம் அருகில் நின்றிருந்த எதிரி நேருவை கைது செய்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட **அ.சா.1 கஸ்தூரிக்கு** சிகிச்சை அளித்த **மருத்துவர் ஷேக் அப்துல்லா** விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.1 கஸ்தூரிக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம்** என அவர் வழங்கிய காயச்சான்றிதழ்கள் பெற்றுள்ளார். **அ.சா.1கஸ்தூரிக்கு காயச் சான்றிதழ் அ.சா.ஆ.6** ஆகும். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை தலைமை காவலர் திரு. முருகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி–1 எதிராக **இதச பிரிவுகள் 294(b), 324, 506(1)**–ன் கீழும் 2, 3 எதிரிகளுக்கு எதிராக **இதச பிரிவுகள் 323, 506(1)**–ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>

**6. இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள பிரிவுகள் U/s. 294(b), 324, 323, 506(1) IPC–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்**.

**7.** அரசு தரப்பு வழக்கு என்னவென்றால், " கடந்த 25.01.2018–ம் தேதி சுமார் 19.00 மணிக்கு திருநாவலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட களத்தூர் கிராமத்தில் புகார்தாரர் கஸ்தூரி என்பவர் வீட்டில் இருந்தபோது, இவ்வழக்கின் எதிரிகளான நேரு, மகேந்திரன், கார்த்திக் ஆகியோர் முதல் நாள் நடைபெற்ற பிரச்சினையின் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு நேரு, கஸ்தூரியை "ஏய் தேவிடியா நாயே வெளியே வாடி" என அசிங்கமாக திட்டியுள்ளார். சத்தம் கேட்டு கஸ்தூரி வெளியே வந்து "ஏன் இப்படி வீண் தகராறு செய்கிறீர்கள்" என்று கேட்டதற்கு, எதிரி 2 மகேந்திரன் "உன்னை விட்டுட்டா எங்கள் மீது பயமில்லாமல் போய் விடும்" என்று சொல்லி கையால் கஸ்தூரியின் கன்னத்தில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். எதிரி 3 கார்த்திக் கஸ்தூரியின் நெஞ்சிலும் காலால் வயிற்றிலும் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். எதிரி 1 நேரு கையில் வைத்திருந்த உருட்டுத்தடியால் கஸ்தூரியின் உடம்பில் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார். மேலும் எதிரிகள் அனைவரும் கஸ்தூரியை பார்த்து "உன்னை கொல்லாமல் விடமாட்டோம்" என கொலைமிரட்டல் விடுத்து குற்ற செயலினை புரிந்துள்ளதால் எதிரி நேரு பிரிவுகள் 294(b), 324, 506(I) IPC–ன் படியும், எதிரி மகேந்திரன், கார்த்திக் ஆகியோர் பிரிவுகள் 323, 506(I) IPC–ன் படியும் குற்றம் புரிந்ததாக திருநாவலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் கஸ்தூரி மற்றும் இவ்வழக்கின் எதிரிகள் தரப்பினரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால், ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் சமாதானம் பேசி ஆகிவிட்டமையாலும், கடந்த **13.05.2026** அன்று இவ்வழக்கில் சமாதானமாக போவதாக கூறி மனு தாக்கல் செய்துள்ளனர். எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் **இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ஆகியவை** சமாதானமாக போகக்கூடிய குற்ற பிரிவுகள் இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தால் அன்றைய தினமே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் **கஸ்தூரி அ.சா.1** ஆகவும், **வாசுதேவன் அ.சா. 2** ஆகவும் மற்றும் கூடுதல் சாட்சியாக தற்போது திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றும் **முஜீபுர் ரஹ்மான்** என்பவர் **அ.சா.3** ஆகவும் விசாரிக்கப்பட்டார்கள்.

**9.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகள் ஆகிய இருதரப்பினரும் சமாதானமாக போவதாக கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் கூடுதல் சாட்சியாக தற்போது திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றும் **முஜீபுர் ரஹ்மான்** என்பவரை விசாரித்து ஆவணங்கள் குறியீடு செய்ய அனுமதி வழங்குமாறு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டத்தின் பேரில் மேற்படி தலைமைக் காவலர் **முஜீபுர் ரஹ்மான் அ.சா.3** ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக **அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6** வரை குறியீடு செய்யப்பட்டது. மேற்படி **அ.சா.3** கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில் நிகழ்நிலை புகார்தாரர் கஸ்தூரி மற்றும் இவ்வழக்கின் எதிரிகள் ஆகிய இருதரப்பினரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால், சமாதானமாக போவதாக கூறி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், நிகழ்நிலை புகார்தாரரான கஸ்தூரி தனது விசாரணையில் பிறழ்சாட்சியம் அளித்துள்ள காரணத்தினாலும், மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க தவறிய காரணத்தினாலும், கூடுதல் சாட்சியான அ.சா.3–ன் அலுவல் ரீதியான சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகள் மீதான

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**11. முடிவாக**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுதிநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள **குற்றச்சாட்டுகளை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை** என்றும் எனவே, **எதிரி 1 நேரு த.பெ. சோமசுந்தரம்** என்பவர் பிரிவுகள் 294(b), 324, 506(I) IPC–ன் கீழும், **எதிரி 2 மகேந்திரன் த/பெ. நேரு மற்றும் எதிரி 3 கார்த்திக் த/பெ. நேரு ஆகியோர்** பிரிவுகள் 323, 506(I) IPC–ன் கீழும் **குற்றவாளிகள் அல்ல** என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**12.** இவ்வழக்கில் தடய சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்பதால் சொத்து குறித்து உத்தரவு ஏதுமில்லை.

**13.** எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில் மேல் முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப் பத்திரம் ரத்தாகவும் செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **2026–ம் ஆண்டு மே மாதம் 26–ம் நாள்** இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

AJIETH SINGH RAAJA Digitally signed by AJIETH SINGH RAAJA Date: 2026.05.26 13:50:42 +0530

**நீதித்துறை நடுவர் எண்.II**
**உளுந்தூர்பேட்டை.**

**பின் இணைப்பு:–**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | கஸ்தூரி (புகார்தாரர்) |
| அ.சா.2 | வாசுதேவன் |
| அ.சா.3 | முஜீபுர் ரஹ்மான் (தலைமைக் காவலர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:–

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | அ.சா.1 –ன் காயச்சான்றிதழ் |

<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>:–இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சி</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை.

<u>எதிரி தரப்பு சான்றுப் பொருள்</u>:– இல்லை.

AJIETH SINGH RAAJA Digitally signed by AJIETH SINGH RAAJA Date: 2026.05.26 13:50:54 +0530

**நீதித்துறை நடுவர் எண்.II**
**உளுந்தூர்பேட்டை.**

<u>குறிப்பு</u>

| | |
|---|---|
| 1) | எதிரிகள் அழைப்பாணையுடன் ஆஜரானார். |
| 2) | சாட்சிகள் 3 நாட்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை |
| 3) | எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரிகள் பிரிவுகள் 294(b), 323, 324, 506(I), IPC–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. |
| 4) | வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 5) | தீர்ப்புரையின் நகல் மாண்பமை தலைமை குற்றவியல் நடுவர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. |

**நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம்,**
**உளுந்தூர்பேட்டை.**

**முன்னிலை:–**
**திரு. அஜித்சிங்ராஜா, B.A.B.L., (Hons),**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**
**468/2025**

**Judgment**
**(Pronounced on 26.05.2026)**